5. 'கொரோனா வைரஸ்' பரவாமல் தடுத்தல் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சரின் அறிக்கை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகின்றபோது, கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளுக்காக 500 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று தெரிவித்தேன். அந்த நிதியான ரூ.500 கோடி, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

15. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

(ஆ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(இ) கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(அ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020–2021 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை). மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.